## திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் : திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப.,

ந.க.எண்:அ3/13429/2016 நாள்: 27.06.2016

பொருள்: கருணை அடிப்படை பணிநியமனம் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விதி 110-ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு - 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் - ஆணை மற்றும் வழிமுறைகள் வெளியிடப்பட்டது — திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகு - கிராம நிர்வாக அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை, நாள்.02.03.2016.
2. தொடர்புடைய ஆவணங்கள்.

----------

**ஆணைகள்:**

கருணை அடிப்படை பணிநியமனம் செய்யப்பட்ட அரசுப் பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் காலதாமதத்தைத் கருத்தில் கொண்டு, 19.02.2016 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை விரைவில் வரன்முறை செய்திட ஏதுவாக பிறப்பிக்கப்பட்ட பார்வை 1-ல் காணும் அரசாணையில் (பத்தி 6-ல்) பின்வருமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

"1. 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எவ்வித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் இதன் மூலம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

2. பத்தி 6.1-ல் உள்ள ஆணையினை செயல்படுத்த சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்".

2) இந்நேர்வில், திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்குள் வரும் பதவிகளில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யபட்டு, எவ்வித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத கீழ்காணும் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களுக்கு, பார்வை 1-ல் காணும் அரசாணை பத்தி.6.2-ல் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கிய வழிகாட்டுதல்களின்படி கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட 14 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அவர்தம் பெயருக்கு எதிரே கலம் 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல், கிராம நிருவாக அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | அலுவலர் பெயர் (திருவாளர்கள்) | பணியேற்பு செய்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | அ. மகேஸ்வரன்,<br>கிராம நிருவாக அலுவலர்.<br>நக்கலூத்து கிராமம்<br>நிலக்கோட்டை வட்டம். | 24.02.2014<br>முற்பகல் | 24.02.2014<br>முற்பகல் |
| 2. | து. சிவக்குமார்,<br>கிராம நிருவாக அலுவலர்<br>பெரியடீகாட்டை<br>ஒட்டன்சத்திரம் | 24.02.2014<br>முற்பகல் | 24.02.2014<br>முற்பகல் |
| 3. | பெ. முத்துக்குமார்,<br>கிராம நிருவாக அலுவலர்.<br>ஆர்.வெள்ளோடு<br>வேடசந்தூர். | 24.02.2014<br>முற்பகல் | 24.02.2014<br>முற்பகல் |
| 4. | வே. சரவணன்,<br>கிராம நிருவாக அலுவலர்.<br>எல்லப்பட்டி<br>ஒட்டன்சத்திரம். | 24.02.2014<br>முற்பகல் | 24.02.2014<br>முற்பகல் |
| 5. | ப. பாலசுப்பிரமணி<br>கிராம நிருவாக அலுவலர்.<br>ஆர்.கோம்பை<br>வேடசந்தூர். | 24.02.2014<br>முற்பகல் | 24.02.2014<br>முற்பகல் |
| 6. | கூ.சிவக்குமார்,<br>கிராம நிருவாக அலுவலர்.<br>எத்திலோடு கிராமம்<br>நிலக்கோட்டை. | 24.02.2014<br>முற்பகல் | 24.02.2014<br>முற்பகல் |
| 7. | ரா. காளியப்பன்,<br>கிராம நிருவாக அலுவலர்.<br>பாப்பம்பட்டி<br>பழனி. | 24.02.2014<br>முற்பகல் | 24.02.2014<br>முற்பகல் |
| 8. | எ. கன்னீஸ்வரி,<br>கிராம நிருவாக அலுவலர்<br>முத்துநாயக்கன்பட்டி கிராமம்,<br>பழனி. | 24.02.2014<br>முற்பகல் | 24.02.2014<br>முற்பகல் |

| | | | |
|---|---|---|---|
| 9. | தி. நாகன்,<br>கிராம நிருவாக அலுவலர்<br>கணவாய்பட்டி,<br>திண்டுக்கல் கிழக்கு வட்டம். | 24.02.2014<br>முற்பகல் | 24.02.2014<br>முற்பகல் |
| 10. | ம. சொர்ணலதா,<br>கிராம நிருவாக அலுவலர்<br>தாமரைப்பாடி<br>திண்டுக்கல் கிழக்கு | 24.02.2014<br>முற்பகல் | 24.02.2014<br>முற்பகல் |
| 11. | சு.பாரதி,<br>கிராம நிருவாக அலுவலர்.<br>குட்டத்துபட்டி,<br>திண்டுக்கல் மேற்கு வட்டம். | 03.03.2014<br>முற்பகல் | 03.03.2014<br>முற்பகல் |
| 12. | பா. சிவக்குமார்,<br>கிராம நிருவாக அலுவலர்.<br>தவசிமடை (குரூப்) கிராமம்,<br>திண்டுக்கல் கிழக்கு. | 04.03.2014<br>முற்பகல் | 04.03.2014<br>முற்பகல் |
| 13. | அ. காளிதாஸ்,<br>கிராம நிருவாக அலுவலர்.<br>மணலூர் கிராமம்<br>ஆத்தூர் வட்டம். | 24.08.2015<br>முற்பகல் | 24.08.2015<br>முற்பகல் |
| 14. | பா.சுப்புராஜ்<br>கிராம நிருவாக அலுவலர்.<br>வீருவீடு கிராமம்,<br>நிலக்கோட்டை. | 24.08.2015<br>முற்பகல் | 24.08.2015<br>முற்பகல் |

3) மேலும், இவ்வுத்தரவினை தனியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்து அதன் நகலுடன் அறிக்கை அனுப்பிடுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்./xxxxxxxxxx
மாவட்ட ஆட்சியர்,
திண்டுக்கல்.

/உ.ந.உ.ப./

பா. அண்ணாதுரை 27/6/16

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது)
திண்டுக்கல்.

27/6/16

பெறுநர்: சம்பந்தப்பட்ட நபர்கள்
(தொடர்புடைய அலுவலகத் தலைவர் மூலம்)

நகல் : முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-05.
நகல் : சார் ஆட்சியர், பழனி.
நகல் : வருவாய் கோட்டாட்சியர், திண்டுக்கல்.
நகல் : வட்டாட்சியர்கள்,
பழனி/ஒட்டன்சத்திரம்/திண்டுக்கல(மேற்கு)/திண்டுக்கல்(கிழக்கு)/நிலக்கோட்டை/வேடசந்தூர்/ஆத்தூர்
நகல் : "அ-3" இருப்புக் கோப்பிற்கு.
நகல் : உபரி "அ-3" இருக்கைக்கு.

வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத் துறை,
பணிகள் அலகு, பணி9(2),
தலைமைச் செயலகம்,
சென்னை—600 009.

**அரசுக் கடித (3டி) எண்.58, நாள் 04.04.2018**

அனுப்புநர்
முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை—5. (இணைப்புடன்)

அய்யா,

பொருள்: பொதுப்பணிகள்—தமிழ்நாடு அமைச்சுப் பணி – திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகு – கருணை அடிப்படையில், கிராம நிருவாக அலுவலராகத் தற்காலிக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.சு.பாரதி என்பவரின் பணியினை அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.03.2016—ன்படி வரன்முறைப்படுத்தியது – தேர்வாணையத்தின் இசைவு கோரியது— தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.03.2016.
2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்.அ3/13429/2016, நாள் 27.06.2016.
3. முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆகு2/46233/2014, நாள் 08.07.2017.
4. அரசுக் கடித எண்.26247/பணி9(2)/ 2017—2 நாள் 10.11.2017.
5. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடித எண். 829/சி.டி—பி2/2018, நாள் 27.02.2018.

*********

பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதங்கள் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகில், கிராம உதவியாளராகப் பணிபுரியும் போது 21.02.2011 அன்று பணியிடையே காலமான திரு.எஸ்.சுப்பிரமணியன் என்பவரின் மகன் திரு.சு.பாரதி என்பவரின் பணியினை பார்வை ஒன்றில் காணும் அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 02.03.2016—ன்படி கிராம நிருவாக அலுவலர் பதவியில் அவர் பணியமர்த்தப்பட்ட நாளான 03.03.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து, பார்வை இரண்டில் காணும் செயல்முறை ஆணையில்

த.பி.பா

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். எனவே, மேற்காணும் அரசாணையின்படி, 1954–ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 16(b)-ன் பிற்பகுதியின்படி தேர்வாணையத்தின் இசைவினைப் பெற்று வழங்குமாறு பார்வை மூன்றில் காணும் கடிதத்தில் முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் கோரியிருந்தார்.

3. 1954–ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 16(பி)--ன் பிற்பகுதியின்படி, இந்நேர்வு தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெற்று அனுப்பி வைக்குமாறு பார்வை நான்கில் காணும் அரசுக் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

4. "1954–ம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 16(பி)--ன் பிற்பகுதியின்படி, திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகில், கிராம உதவியாளராகப் பணிபுரியும்போது 21.02.2011 அன்று காலமான திரு.எஸ்.சுப்பிரமணியன் என்பவரின் மகன் திரு.சு.பாரதி என்பவர் கருணை அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப்பணியில், வருவாய்த் துறையில் பணியமர்த்தப்பட்ட நாளான 03.03.2014 முற்பகல் முதல் கிராம நிருவாக அலுவலர் பதவியில் அவரது பணி வரன்முறைப்படுத்தப்பட ஏதுவாக தேர்வாணையம் தனது இசைவினை அளிக்கிறது" என பார்வை ஐந்தில் காணும் கடிதத்தில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளது. எனவே, இந்நேர்வில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

5. இந்நேர்வு தொடர்பாக, பெறப்பட்ட அசல் சான்றிதழ்கள்/ஆவணங்கள், தக்க மேல்நடவடிக்கைக்காக தங்களுக்கு இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகின்றன. அவற்றை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகையை அரசுக்கு உடன் அனுப்பி வைக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

3/4 4.4.18

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

04/04/18

நகல்

மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் மாவட்டம்.
திரு.சு.பாரதி, கிராம நிருவாக அலுவலர்.
(திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் வழியாக)
செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்,
பிரேசர் பாலச்சாலை, சென்னை --3.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை--9.
மாநில கணக்காயர்(RAO), தலைமைச் செயலகம், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.